உ
சிவமயம்



யாழ் வடமராட்சி துன்னாலை வடக்கை பிறப்பிடமாகவும்,
கரம்பைக்குறிச்சி வரணியை வசிப்பிடமாகவும் கொண்ட
அமரர்

# செல்வநாயகம் கணபதிப்பிள்ளை

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

05.10.2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய்
நல்லதொரு பெற்றவராக பாசத்தோடும்
பண்போடும்
கண்ணியமாய் வளர்த்து
வேண்டிய தெல்லாம் தந்து நல்வழி நடத்தி
வாழ வைத்த தெய்வங்களே
அம்மாவை இழந்த சோகம் இன்னும்
ஆறவில்லை அப்பாவையும் இழந்து நித்தம்
கண்ணீரில் நனைகின்றோம் வாழ் வானுறை
தெய்வமாகி விட்ட எங்கள் அன்புத்
தெய்வங்களின்
பாதார விந்தங்களில் இம் மலரினைக்
காணிக்கை யாக்குகின்றோம்

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!

– குடும்பத்தினர் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



மண்ணுலகம்
10.03.1958

விண்ணுலகம்
05.09.2022

# அமரர் செல்வநாயகம் கணபதிப்பிள்ளை

## திதி நிர்ணயம்

ஆண்டு நல் சுபகிருது ஆவணி மாதமதில்
பூண்ட திதி சார் பூர்வபக்க தசமியே – நல்லபுகழ்
கண்ணி வான் கணபதிப்பிள்ளை
மண்ணுலகை விட்டு சிவனார் நற்பேறடைந்த நாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# தோத்திரப்பாக்கள்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான்
விநாயகனே விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாய்
தன்மையினால் கண்ணிற் பணிமின் கனிந்து.

## தேவாரம்

நிரைகழ லரவஞ் சிலம்பொலி யலம்பும்
நிமலர்நீ றணிதிரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாய் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகடல் ஓத நித்திலங் கொழிக்குங்
கோணமா மலையமர்ந் தாரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

யானேபொய் என்நெஞ்சும் பொய் என் அன்பும் பொய்
ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே
தேனே அமுதே கரும்பின் தெளிவே தித்திக்கும்
மானே அருளாய் அடியேன் உனைவந் துறுமாறே

## திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக்கண் உடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடைஎம் அற்புதக் கூத்தா
அம்பொன்செய் அம்பலத் தரசே
ஏறணி கொடிஎம் ஈசனே உன்னைத்
தொண்டனேன் இசையுமா றிசைய

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவுபெற் றேன்பெற்ற
தார்பெறு வார்உலகில்
ஊரும் உலகும் கழற உழறி
உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

ஆதியாய் நடுவு மாகி அளவிலா அளவும் ஆகிச்
சோதியா யுணர்வு மாகித் தோன்றிய பொருளு மாகிப்
பேதியா ஏக மாகிப் பெண்ணுமாய் ஆணு மாகிப்
போதியா நிற்குந் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி

## திருப்புகழ்

பக்தியால் யானுனை பலகாலும்
பற்றியே மாத்திருப் புகழ்பாடி
முத்தனா மாறனைப் பெருவாழ்வில்
முக்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தம தான சற்குண நேயா
ஒப்பிலா மாமணி கிரிவாசா
வித்தகா ஞானசத் தினிபாதா
வெற்றி வேலாயுதப் பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை அறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறை துதிப்பாக்கள்

## கம்பிளி ஞானவைரவரை வேண்டி

எங்கள் குலமோங்கவென எழுந்தருளி
எமைக்காக்கும் எங்கள் ஞான வயிரவக் கடவுளே
பொங்கலிட்டு மடைபோட்டு நீறு பூசி
போற்றுகின்ற அடியார்கள் துயரம் போக்கி
தங்கி அருள் புரிபவரே தாழ்ந்தே துன்னை
தந்தள்க நின்னரிய பாதவாழ்வு
கங்கையெனப் பெருகிவரும் கருணை வெள்ளம்
காண மனம் கொண்டுவிட்டேன் ஆழ்க ஐயா

## முதலி அம்மனை வேண்டி

பூத்த உயிர் பூமியிலே வாழ்ந்திடவே செய்பவளே
பூவோடு உன்பாதம் நாளும் இறைஞ்சி
காத்துக் கருணை தந்து கவினாகி நின்றவரே
காற்றோடு கலந்துநின்று காலடிக்கு வந்துவிட்டேன்

## வல்லியானந்தப் பிள்ளையாரை வேண்டி

தேங்கும் பனைகளும் மருதநிலம் திகளும்
வளமான வல்லியானந்தப் பதியினிலே அமர்ந்த ஐங்கரனே
கங்கை புவிற்படர நீகாவடி யெடுத்தாய்
அங்கையுறு கனிதனை தம்பிவருமுன் பெற்று
தந்தை தாய் தானுலக மெனுமுயர் ஞான
தத்துவத்தை உலகினுக்கே நிலை நாட்டி வைத்தாய்
முந்தை வினைப்பயனே போக்கி யாட் கொள்வாய்
அற்புத விநாயகனே அருள்வாய் அடைக்கலமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிட்டிவேரம் அம்மனை வேண்டி

அழகான கட்டிடங்கள் மிளிர்கின்ற வரணி
பதியினிலே வீற்றிருக்கும் தாயே
உளம் பொருந்தி அல்லும் பகலும் நின்வாசலிலே
வந்து நீறும் பூசி கல்லும் கரைந்துருக வேண்டுவனே
அம்மா வென்றிர்ந்து வணங்கி தாயே
மன அமைதி காண்பேன் கருணைக் கடலே
கங்கையெனப் பெருகி வரும் கருணை வெள்ளம்
காண மனம் கொண்டுவிட்டேன் ஆழ்க தாயே

## கிளான் பிரத்தியங்கிரி காளி அம்மனை வேண்டி

அம்மாவுன் வாசலிலே வந்து நின்று
அற்புதக் கோலம் கண்டன்றன் நீறும் பூசி
அம்மா வென்றிரக்கின்ற போதும் காணும்
அந்த ஒரு மன அமைதி கண்டதாலே
இம்மானிலத்தினிலே வாழும் வாழ்வு
எட்டாத கனிபோல வெறுத்தம்மா
அம்மாவே பலவினையே போக்கியுந்தன்
அடியினையே சேர்ந்து எனை அணைப்பாயம்மா

## வல்லிபுர மாயவரை வேண்டி

அழகார் துளசிக் குரியானே
அரவிற் படரும் திருமாலே
இளகா மனமும் உன்னடியே
எண்ண இளகி நிற்கிறதே
எழிலார் பிதாம்பரத்தானே மாயவா
எவ்வுயிரையும் காப்பாயே கண்ணா
அழுதே இரக்கும் என்றனையும் நின்
அடியே காண அருளாயோ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செல்வச்சந்நிதி முருகனை வேண்டி

சேவல் கொடியெனக் கொண்ட நீல மயிலதனை
மேவு மழகிய வாகன மாக்கினையாறு முகத்தவனே
பாவ மறிகிலன் பற்றிய துன்னடி யொன்றையிங்கே
தேவரடையரு பாதம் பொருந்தப் புரியருளே

வாழும் வயதிது வாயினும் என் தலையோட்டிலன்று
தாழும் சடையரன் தனமகனே யுனைச் சாருதற்குச்
சூழும் வயதிது வென்றே எழுதினை அப்பிரமன்
தாளின் துணை பெற வந்தனன் சந்நிதி முருகா தாங்குதியே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை வரலாறு

ஈழமணித் திருநாட்டின் இன்முகமாம் யாழ்ப்பாணத்தில் திருவும் கல்வியும் சீரும் தேங்கித் திகழ்கின்ற கல்விமான்கள் வாழும் வடமராட்சிப் பகுதியில் உள்ள துன்னாலையில் உயர் சைவ வேளான் வழித்தோன்றலில் திரு.திருமதி செல்வநாயகம் வள்ளியம்மை தம்பதியினருக்கு மூத்த மகனாக அமரர் கணபதிப்பிள்ளை 1958.03.10ம் திகதி இப் புண்ணிய பூமியில் வந்துதித்தார்.

இவரின் உடன் பிறப்புக்களாக செல்வராணி சிவராணி கணேசலிங்கம், இந்திராணி (பிரான்ஸ்), இந்திரகுமாரி, கணேசநாதன் (இலண்டன்) ஆகியோர் இன்பம் துன்பம் இரண்டையும் ஏற்று அன்புடன் வளர்ந்து வந்தார்கள்.

இவர் தனது ஆரம்பக்கல்வியை யா/காசிநாதர் வித்தியாலயத்திலும் இடைநிலைக் கல்வியை யா/ ஞானசாரியார் கல்லூரியிலும் கல்வி பயின்றார். பின் இவர் தனது வீட்டுச் சூழ்நிலை காரணமாக தனது கல்வியை இடைநிறுத்தி தனது தகப்பனாருடன்இணைந்து வியாபாரம், கமம் போன்ற தொழிலை செய்து தனது சகோதரர்களை முன்னேற்ற அரும்பாடு பட்டார்.

இப்படியாக சந்தோசமாகவும் ஒற்றுமையாகவும் வாழ்ந்து கொண்டிருக்கும் வேளையில் தனது தாயை 1983ம் ஆண்டில் தனது 25வது வயதில் இழந்தார். தாயை இழந்த சோகம் பெரிதும் அவரின் மனதைவருத்தியது. அப்படி இருந்தும் குடும்பத்தின் தலைமகனாய் தன் கடமைகளை செய்ய வேண்டும் என்று தன்னை தேற்றி தனது கடமைகளை செவ்வனே செய்து தனது இரு சகோதரிகள் திருமண வயதை அடைந்ததும் தன் முயற்சியால் திருமணம் செய்து கொடுத்தார்.

அவர் தன் திருமண வயதை அடைந்ததும் தகப்பனாரின் விருப்புடன் வரணி கரம்பைக்குறிச்சியை சேர்ந்த திரு.திருமதி பொன்னம்பலம் மாணிக்கம் தம்பதியினரின் மகள் அமரர் மகேஸ்வரியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1988 ஆண்டில் கரம்பிடித்து இல்லற வாழ்வில் இனிதே இணைந்து கொண்டார். அவர்களது இல்லறத்தின் நற்பேறாக காந்தீபன் (சாரதி), உசாந்தன் (பிரான்ஸ்), டினோசா (ஆசிரியை - கிளி/ புன்னைநீராவி அ.த.க பாடசாலை) ஆகிய பிள்ளைகளைப் பெற்றெடுத்தனர்.

இவர் தான் செய்த தொழிலிலே முன்னேறி கமத்திலும் வியாபாரத்திலும் தலை சிறந்து பெயரும் புகழுமாக வாழ்ந்து வந்தார். தனது புகுந்த வீட்டிலும் சிறந்த ஒரு மனிதனாக திகழ்ந்து வீட்டிற்கு வரும் உறவினர்களையும் அயலவர்களையும் இன்முகத்துடன் வரவேற்பார். தமிழர்களின் கலாச்சாரமாகிய மாட்டுச்சவாரியில் தானும் பங்கேற்பதுடன் மாட்டுச்சவாரி ஆங்காங்கே நடப்பதற்கு முன்னின்று செயல்படுவார். 2013ம் ஆண்டு கடைசி சகோதரியின் திருமணத்திற்காக இந்தியா சென்று அவரது திருமணத்தையும் சிறப்புற நடாத்தி இன்புற்றார்.

அதே போல் தனது பிள்ளைகளும் தலை சிறந்து வரவேண்டும் என்று அரும்பாடு பட்டு தன் தொழிலையே மூத்த மகனுக்கு கற்றுக் கொடுத்து சிறந்த சாரதியாக்கினார். தனது 2வது மகனையும் பிரான்ஸ் நாட்டுக்கு அனுப்பி வைத்தார். தனது ஒரே மகளை அரசாங்க தொழிலுக்கு செல்ல வேண்டும் என்று அவரைப் படிப்பித்து தர்காநகர் தேசிய கல்வியற் கல்லூரிக்கு அனுப்பி வைத்து இன்புற்ற வேளையில் அவருக்கு சிறுநீரக பாதிப்பு ஏற்பட்டு இக் கொடிய நோயால் மிகவும் கஸ்ரப்பட்டு இரத்தச் சுத்திகரிப்புக்காக மந்திகை ஆதாரவைத்தியசாலைக்கு சென்று வருவார். சென்று வரும் வேளையில் தனது சகோதரர்களுடன் சேர்ந்து கதைத்துப் பேசி வருவார்.

இப்படி இருக்கும் வேளையில் தனது மகளின் படிப்பு முடிந்ததுவும் தனது நோய் காரணமாகவும் தனது மகளுக்கு திருமணம் செய்ய வேண்டும் என்று எண்ணி ஆசைப்பட்ட தனது ஊரைச் சேர்ந்த இரத்தினசிங்கம் சரஸ்வதி தம்பதியினரின் மகன் கஜப்பிரசாந் (பாதுகாப்பு உத்தியோகத்தர், இலங்கை வங்கி) திருமணம் செய்ய சம்பந்த கலப்பு செய்து இருக்கும் வேளையில் தனது தகப்பனாரை இழந்து மனம் வருந்தினார். தகப்பனாரின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதிக் கடமைகளையும் செய்து அதன் பின் மகளின் பதிவுத் திருமணத்தையும் செய்து முடித்து சந்தோசமாக இருக்கும் வேளையில் தனது மனைவியாரை 08.07.2022 அன்று இழந்து மிகவும் வேதனைப்பட்டார்.

தனது மனைவியின் பிரிவு அவருக்கு கவலையையும் தனிமையையும் ஏற்படுத்தியது. வாழ்விலும் சாவிலும் தாங்கள் ஒன்றாகவே இருக்க வேண்டும் என்பது விதியின் ஏற்பாடு போல், திடீரென ஏற்பட்ட சலி அடைப்பு காரணமாக மந்திகை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்று செயற்கை ஒட்சிசன் ஏற்றப்பட்டு சிகிச்சை பலனின்றி 05.09.2022 இப்பூவுலகை விட்டு மனைவியுடனும், தகப்பனுடனும் இணைந்தார். அவரது கடைசி ஆசை தன் ஊரின் கியான்காடு இந்து மயானத்தில் அடக்கம் செய்ய வேண்டும் என்பதுதான் அதனையும் குடும்பத்தினர்கள் நிறைவேற்றினார்கள்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கற்பாக்கள்

## மூத்த மகன் காந்தீபன் இரங்கல்

இப்பிறப்பில் நாங்கள் செய்த அருந்தவமோ
இங்கிதமாய் வாய்த்த எங்கள் அருமை அப்பாவே
பொன்னான உங்கள் திருமுகத்தை இனி எப்போது காணபோகின்றோம்
உங்கள் பொறுமைக்கும் பொலிவிற்கும் இனியிங்கு
போற்றுதற்கு யாரையப்பா தேடிடுவோம்
இரவு பகல் பாராது உழைத்து எம்மை வாழ வைத்த தெய்வமே
இன்று வரை என்னை யாரிடமும் விட்டுக் கொடுத்தது இல்லை
என் மூத்தவன் என்று எப்போதும் எனக்கு
உறுதுணையாக நின்ற என் அப்பாவே
இப்போது வேரறுந்த மரம் போல தனிமரமாக தவிக்கவிட்டு
எங்குதான் சென்றீர்களோ
அம்மாவின் இழப்பினை தாங்கிக் கொள்ளாது தவிக்கின்ற
நமக்கு ஏன் அப்பா நீங்களும் இப்படியொரு இழப்பினை
நமக்கு ஏற்படுத்தி விட்டுச் சென்றீர்கள்
எத்தேசம் சென்றாலும் உங்கள் நாமம் தான் ஒலிக்கின்றன அப்பா
உங்கள் நாமம் கேட்கும் போது என்னையறியாமலே கண்கள் கலங்கி நிற்கின்றன அப்பா
உங்களின் பிரிவுத் துயரினைத் தாங்காது உள்ளம் கொதியாய் கொதிக்கின்றதப்பா
இப்படி எங்களை ஏனப்பா தவிக்கவிட்டு சென்றீர்கள்
எத்தனையோ பேர்களின் வாழ்வினை செழிக்க வைத்த அப்பாவே
எங்களின் வாழ்க்கையினை மட்டும் புலம்பவிட்டு எங்கு தான் சென்றீர்களோ
உங்களைக் காணாது ஏங்கித் தவிக்கின்றேன் அப்பா
இனி உம்மை எங்கே நான் காணப் போகின்றேனோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகன் உசாந்தன் இரங்கல்

காவிய நாயகனான என் ஆசை அப்பாவே
சிறுவயதில் இருந்து கஷ்டப்பட்டு எம்மை நல்ல வழியில்
வாழ்வதற்கு வழிகாட்டிய தெய்வமே
கஷ்டம் என்றால் என்ன என்பது என்று எமக்கு தெரியாமல்
எல்லா கஷ்டங்களையும் நீங்களே அனுபவித்து எம்மை நல்ல
நிலைக்கு ஆளாக்கிய அப்பாவே
நான் செய்யும் குழப்படிகளுக்கு கோபமாக பேசினாலும் மறுகணமே
பாசம் அதிகமாகக் காட்டுவீர்கள் அப்பா
நான் பத்து வருடமாக வெளிநாட்டில் உங்களை பிரிந்து
தவிப்பதையே என்னால் தாங்கி கொள்ள முடியவில்லை
இப்படியிருக்கும் போது எதற்காக அப்பா எனக்கு இப்படியொரு
தண்டனையினை தந்துவிட்ட சென்றீர்கள்
அம்மாவின் இழப்பினை தாங்கிக் கொள்ளாது தவிக்கின்ற நிலையில்
அப்பா நீங்கள் இருக்கின்றீர்கள் என்று ஓர் ஆறுதலாக இருந்தேனே
அம்மாவை தான் பார்க்க எனக்கு அதிஷ்டம் இல்லை
அப்பாவை என்றாலும் சென்று பார்த்துவிட வேண்டும் என்ற
ஆசையிலே இருந்தேனே
இப்படி என் ஆசைகளை வெறும்கனவாக மட்டுமே இருக்க
விட்டுச் சென்று விட்டீர்களே
கடைசியாக கூட தொலைபேசியில் பேசும் போது
என்ன செய்யுது அப்பா என்று கேட்டேனே
அப்பொழுது கூட எனக்கு ஒன்னும் இல்லை என்று என்
கூட நன்றாக தானே பேசினீர்கள் அப்பா
மறுநாள் உங்களின் மறைவு கேட்டதும் என்ன செய்வது
என்று தெரியாமல் திகைத்துப் போய் நின்றேனே அப்பா
அப்பா. அம்மா உங்கள் இருவரையும் பார்க்காத பாவியாகி விட்டேனே
உங்கள் இருவரின் இழப்பில் இருந்து என்னால் மீட்டெழுந்து
வரமுடியாது தடுமாறியே நிற்கின்றேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகள் டினோசா இரங்கல்

அன்போடும் பண்போடும் பாசங்காட்டி பக்குவமாய் எனை
வளர்த்த என் ஆசை அப்பாவே எங்கே சென்றீர்கள்
உங்கள் மறைவை ஏற்க மறுக்கிறது என் உள்ளம் அப்பா
இப்படி நடக்கும் என்று எள்ளளவும் நான் நினைக்கவில்லை அப்பா
சிறுவயதிலே என்னைக் குளிப்பாட்டி உணவூட்டி என்னை
பார்த்து பார்த்து வளர்த்த என் ஆசை அப்பாவே
எதற்காக என்னை இப்படி தவிக்க விட்டுச் சென்றீர்கள்
மூச்சுக்கொரு முறை பிள்ளை பிள்ளை என்று கூறி அழைப்பீர்களே அப்பா
எனை இனி யார் அப்பா அப்படி அழைக்கப் போகின்றார்கள்
நான் பிறந்து வளர்ந்ததில் இருந்து இன்று வரை என்னை அடித்ததோ பேசினதோ இல்லை பாசம் என்ற அன்பு மழையை மட்டும் தான் பொழிந்தீர்களப்பா
எனக்கு நோய் வாய்ப்பட்டால் கூட அதை உங்களால் தாங்கிக் கொள்ளாது தவிப்பதை நான் அறிவேன் அப்பா
என்னருகே அடிக்கடி வந்து என்ன செய்யுது பிள்ளை என்று கேட்டு
கலங்கியே நிற்பீங்களே அப்பா
வாழ்க்கையில் வந்த பல கஷ்டங்கள், துன்பங்கள் எல்லாவற்றையும் தனதாக்கி
சந்தோஷத்தை மட்டுமே எங்களுக்கு வாரி இறைத்த வள்ளல் அல்லவா எங்கள் அப்பா
கஷ்டம் என்ற ஒன்றையும் நமக்கு வெளிக்காட்டாமல் நான் கேட்ட எல்லாவற்றையும்
மறுகணமே செய்து முடிப்பிர்கள் அப்பா
நீங்கள் உங்கள் முழு வாழ்க்கையையும் எங்களுக்காக முற்றுமுழுதாக அர்ப்பணித்தீர்கள்
நான் வேலைக்குச் செல்லும் போதும் வேலை முடித்து வரும் போதும் எனக்காக
வாசலில் காத்திருந்து வரவேற்பீர்கள் இனி அந்த சிரித்த அன்பான முகத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்போது காண்பேன்
எனக்காக எல்லாவற்றையும் பார்த்து பார்த்து செய்வீர்கள் அப்பா
என்னுடைய பெயரினை வாகனங்களிலே பதித்து என் பிள்ளை அவள் எல்லாமே அவளுக்கு மட்டும்தான் என்று என் மீது அன்பை மட்டுமே காட்டுவீங்கள் அப்பா
அப்பா நீங்கள் கடந்து வந்த பாதை மிகவும் கல்லும் முள்ளும் நிறைந்த
கரடுமுரடான பாதை ஆனாலும் உங்கள் கடின உழைப்பினாலும்
விடா முயற்சியினாலும் இன்று உலகமே போற்றும் ஓர் சிறப்பான
மனிதனாக எல்லோருடைய மனங்களிலும் பதிந்துள்ளிர்கள் அப்பா
அப்பா நான் உங்கள் மகளாகப் பிறந்ததற்கு என்ன தவம் செய்தேனோ
எத்தனை ஜென்மம் எடுத்தாலும் நான் தான் உங்கள் மகளாகப் பிறக்க வேண்டும்
அப்பா நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும் நீங்கள் என் மீது காட்டிய
அன்பும் அரவணைப்பும் அறிவுரைகளும் என்றென்றும் என் மனதில் நீங்கா வண்ணம் நிலைத்திருக்கும்
ஆயிரம் உறவுகள் இருந்தென்ன அப்பா என்ன அந்த அன்பான
வார்த்தை சொல்ல அப்பா இன்று என்னுடன் இல்லையே என்ன செய்வேன்
என் மனமோ துடிக்கிறது, கலங்குகிறது அப்பா
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்

## மருமகன் கஜப்பிரசாந் இரங்கல்

அறிந்த சில நாளில் அன்பறிந்து வியந்தேனே மாமா
அன்புத்தந்தை என்று ஆசை மனதில் கொண்டேனே
எம்மை தடுமாற வைத்தெங்கு போனீரே
வாய் முழுவதும் துயரடைத்து
வார்த்தையிழந்து போனேனே
உங்கள் அளவு கடந்த அன்பை
போய் எங்கு தேடுவோம்
காலத்தால் நீர் செய்த கனத்த உதவிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞாலத்தில் பெரிதன்றோ

என்றென்றும் எங்கள் நெஞ்சம் உங்கள் அன்பு முகத்தை

ஞாபகம் ஊட்டும் மாமா

உங்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி

நிற்கின்றேன்

## சகோதரன் கணேசலிங்கம் இரங்கல்

ஆறுதற்கு நிழல் மரம் போல் இருந்து அண்ணா

தந்தையும் தாயும் போல் அன்பு தந்தீர்

எத்தகைய துயர் வந்தும் கோபங்காட்டாய்

எம்மரிய அண்ணா மாண்டீரோ

பாரிய நோய் வந்து தாக்கி மடிந்தீரோ

இனி உங்கள் தோற்றம் காண வழியில்லை புலம்புகின்றேன்

## சகோதரன் கணேசநாதன் (லண்டன்) இரங்கல்

வற்றாத பாசமுள்ள மூத்தண்ணா

பற்றுடனே வளர்த்து வாழவைத்த தெய்வமே

தூரதேச மதிலிருந்தாலும் என்றும் உங்கள்

நினைவுடன் தொலைபேசியிலே கதைப்பேனண்ணா

கண்ணிவான் உங்கள் மரணச் சேதி மனம் நெகிழ வைத்தனயோ

இறுதிப் பணி செய்யக் கிட்டவில்லை கலங்குகின்றேன்

## சகோதரிமார் இரங்கல்
## (செல்வராணி, சிவராணி, இந்திராணி (பிரான்ஸ்), இந்திரகுமாரி)

ஒரு கொடியில் மலராக உதித்த உடன்பிறப்பே

என்றும் நேரான அன்பினோடு வாழ்ந்தோமே

வருத்த மொன்று இருந்தபோதும் தேடியே வந்து

அருகிருந்து கதைகள் பேசி மகிழ்ந்து போவாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருபோதும் குறைவிலா நிறைந்த வாழ்வு
துணைவியாரும் மாண்டுபோக துயர் கடனில் மூழ்க வைத்து
அருந்துணையாய் இருந்த அண்ணா மறைந்தாயோ
மண்ணில் மடியுமட்டும் மாறாக் கவலைதானே

## மைத்துனர் மைத்துனிமார் இரங்கல்
## (சிவசுப்பிரமணியம், மாலதி, கணேசலிங்கம் - பிரான்ஸ். பார்த்திபன் (லண்டன்), கௌசிகா - லண்டன்

பறந்தோடி உதவிநின்ற பண்பான மைத்துனரே
பார்புகழ வாழ்ந்தீரே பாரிய நோய் வந்து தாக்கியதோ
பெற்ற அன்புப் பிள்ளைகளையும் மறந்து போக மனம் வந்ததுவோ
ஒழிந்ததுவோ உங்கள் அன்புப் பேச்சு கலங்குகின்றோம்

## மச்சாள் மார் இரங்கல்
## (இராசம்மா, சிவபாக்கியம். கமலாதேவி)

பாசத்து உறவொன்று பறந்தோடி சென்றதுவே
அளவுடற்கரிய பண்புகள் கொண்ட மைத்துனரே
பழகிட இனித்திடும் பாசம் கொண்டவரே
எங்கள் உடன் பிறந்த அருமைச் சகோதரிக்கு ஒப்பற்ற துணைவராய் திகழ்ந்தவரே
நீர் வாழ்க்கையிலே பல இன்னல்களைச் சந்தித்து அவற்றை எல்லாம்
எதிர்கொண்டு வாழ்க்கையில் வாழ்வாங்கு வாழ்ந்த ஒரு உத்தமனே
எங்களது வாழ்வில் கற்றுக் கொண்ட அனுபவங்களிலும் பழகிக் கொண்ட
மனிதர்களிலும் நீங்கள் ஒரு உயர்ந்த மனிதன் ஆகும்.
தயாள குணமும், தாராள மனமும் வீட்டுக்கு வருவோரை அன்போடு
வரவேற்று ஆதரித்து உபசரிக்கும் உயர்ந்த குணத்தையும் நாம் அறிவோம்
இன்று நாம் இப்படி ஓர் உத்தமனை இழந்து நிற்கின்றோம்
உங்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனை இறைஞ்சுகின்றோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமக்கள் இரங்கல்

## (சுயாதா, நளினி. நளன், துசியந்தன் (பிரான்ஸ்), சுகந்தன் (பிரான்ஸ்), சுகிர்தன் (பிரான்ஸ்)

பாசமிகு தாயன்பை மாமா உங்களிடம்
நேசமிகு மருமக்கள் நியமமாய் பெற்றிருந்தோம்
மருவியே எம்முடன் வாழ்வீர் என்று நம்பியிருந்தோம்
மறந்தாயோ பெருகுதே கண்ணீர் ஆறாய் ஐயோ மாமா

## பெறாமக்கள் இரங்கல்

## (அனோசன், ஆர்த்திகன், சாத்விகா (லண்டன்), கனிஸ்கா (லண்டன்)

உள்ளத்து கள்ளமில் உயர் குணக்குன்றே
வள்ளலாய் வாழ்ந்து பெரியப்பா மாண்டீரோ
ஊர் வந்து பார்க்கவும் கொடுத்து வைக்கவில்லை
பாசமிகு வடிவத்தை இழந்தோமே கலங்குகின்றோம்

## மாமா இராசரத்தினம் இரங்கல்

பெற்ற மகன் போல் பிணைந்திருந்த மாசற்ற மருமகனே
கண்ணும் பஞ்சடைந்து நடையும் தடுமாறி நாமிருக்க
பாதி வயதினிலே பாரிய நோய் தாக்கி மாண்டீரோ
மண்ணில் மடியுமட்டும் மாறாக் கவலையடா

## சிறியதாய்மார் செல்வமணி இராசம்மா

எங்கள் குடும்பத்தின் மூத்த அன்பான பெறாமகனே
என்றுமே எல்லோருடனும் இணைந்து வாழ்ந்த பெருமகனே
அகன்றனையோ பாசமிகு வடிவத்தை இழந்தோமையோ
இனி உங்கள் தோற்றம் காண இல்லையே பதறுகின்றோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உற்றார் உறவினர் அயலவர் நண்பர்கள் இரங்கல்

கண்டதும் கனிவுறக் கதைகள் பேசி
அண்டியே விருந்து தந்த ஆற்றல் மிகு கணபதிப்பிள்ளை
மண்டிய துயரத்துள்ளோ மாயவைத்து
பேற்றை விரும்பி நடந்தனன் சுற்றம் பதறியதே

## தேற்றம்

நேற்றிருந்தோர் இன்றில்லை நிலவுலகில்
தோற்றுமுயிர் அத்தனையும் துஞ்சுவது திண்ணமன்றோ
ஏற்றமிகு கணபதிப்பிள்ளை இயற்கையே எய்தினார்
ஊற்றெடுக்கும் துயராற உமை பகவான் அடிபணிவீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எங்கள் குடும்பத் தலைவர் அன்புத் தெய்வம் செல்வநாயகம் கணபதிப்பிள்ளை அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு உடன் வந்து உதவிகள் புரிந்த எம் உறவினர்கள் அயலவர்கள் நண்பர்கள் அனைவருக்கும் கண்ணீர் அஞ்சலி செய்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், தொலைபேசி மூலம் அஞ்சலி அனுதாபம் தெரிவித்தவர்கள், இறுதிக் கிரியையின் போது உதவிய வல்லியானந்த இளைஞர்களுக்கும் இன்னும் வேறு வழிகளில் உதவி புரிந்த நண்பர்கள் அன்பர்கள் அனைவருக்கும் அந்தியேஷ்டி கிரியையிலும் சபிண்டீகரண கிரியைகளிலும் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் கலந்து கொண்ட அன்பு உள்ளங்களுக்கும் எங்கள் மனம் கனிந்த நன்றி அறிதலை பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி

வரணி,
கரம்பைக் குறிச்சி.

நன்றியுடன்
**– குடும்பத்தினர் –**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வம்சவிரு

❖கணபதிப்பிள்ளை + ❖சிவகாமிப்பிள்ளை

- ❖திருநாவுக்கரசு
- ❖தியாகராஜா
- ❖செல்வநாயகம் + ❖வள்ளியம்மை
- இராசம்மா + மகேந்திரநாயகம்
  - மனோகரன்
  - ❖ஜெயகரன்

❖செல்வநாயகம் + ❖வள்ளியம்மை

- **கணபதிப்பிள்ளை**
- செல்வராணி + ❖தர்மரத்தினம்
  - சுயாதா
- சிவராணி + சிவசுப்பிரமணியம்
  - நளினி
  - நளன்
- கணேசலிங்கம் + மாலதி
  - அனோசன்
  - ஆர்த்திகன்

கணபதிப்பிள்ளை

- காந்தீபன்
- உசாந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## …விருட்சம்

❖பொன்னம்பலம் + ❖மாணிக்கம்

…மா
…ாயகம்
…ரன்
…ரன்

❖சிதம்பரப்பிள்ளை
+
கமலாதேவி
↓
சந்திரமோகன்
சந்திரகுமாரன்
பிரபாலினி
சந்திரபாபு
சந்திரசொரூபன்
❖சந்திரகோபன்

❖செல்வராசா

சிவபாக்கியம்
+
செல்வராசா

கமலாதேவி
+
வேலாயுதம்
↓
தினோசினி
திசாளினி

❖மகேஸ்வரி

…ம்

இந்திராணி
+
கணேசலிங்கம்
↓
துசியந்தன்
சுகந்தன்
சுகிர்தன்

இந்திரகுமாரி
+
பார்த்தீபன்

கணேசநாதன்
+
கௌசிகா
↓
சாத்விகா
கனிஸ்கா

…ன்

டினோசா
+
கஜப்பிரசாந்

❖அமரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்?
அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகிறது.



**இந்த மாற்றம் உலக நியதியாகும்.**

தமிழ்ப்பூங்கா - 021 226 4014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org